இருந்தாலும் நிலைமையைச் சொல்லிவிடுகிறேன். அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் பேரில் மாநிலக்குழு கான்ட்ராக்டர்களை அழைத்து அதை எப்படி செயல்படுத்துவது என்பதை ஆலோசித்து அதன்பின்னர் அரசுக்கு அனுப்புவார்கள். அதற்குப் பிறகு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளையான்குடிக்குக் குடிநீர் வழங்கல்

*வினா எண் 674— திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

முகவை மாவட்டம், இளையான்குடி குடிநீர் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தற்பொழுது இத்திட்ட மதிப்பீடு நடப்பு விலைப்பட்டியல்படி திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது,

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இளையானகுடி திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? இப்போது செயல்படுத்தப்பட்டு துவங்கப்பட்டதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இது ஒரு 'காம்ப்ரகென்சிவ் ஸ்கீம்'. இதில் இளையான்குடி பேரூராட்சி குடிநீர் தேவை மட்டும் அல்லாது டாக்டர் ஜாகீர் உசேன் கல்லூரி மற்றும் வழியோர கிராமங்களான அலிமதுரை, வானி, நாகர்குடி, உலகமணியேந்நல், அட்டுக்குடி, கிருஷ்ணபுரம். நெடுங்குளம், ரகுநாதமடை, அத்திக்கரை, லட்சுமிபுரம், அமெய்யனேந்தல் இளையவலசை, கொங்கம்பட்டி, பெரும்பாலை, கல்லூரணி, சித்தூரணி, ஆகிய ஊர்களின் குடிநீர் தேவையையும் சேர்த்து கணக்கிடப்பட்டு அதன்படி குடிநீர் திட்டம் வடிவமைக்கப்பட்டது. ஆய்வு முடிந்து அதற்காக ரூ. 42.50 லட்சம் செலவாகும் என்றும் பராமரிப்புக்காக ரூ. 95,000 ஆகும் என்றும் பரிந்துரை வழங்கப்பட்டது. அந்த பரிந்துரை 1975-ல் கொடுக்கப்பட்டு இப்போது 1979ஆம் ஆண்டு ஆகிறது, 'எஸ்கலேஷன்' அதாவது விலை அதிகம் ஆகும். அதனால் விலைப்பட்டியல் திருத்தி அமைக்கப்பட்டு, அது தலைமை பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் அவர்களால் வரையறை செய்யப்பட்டபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.